RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்


DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-62 | 08 மார்ச் | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ஓவிய, சிற்ப கலைஞர்கள் 6 பேருக்கு 'கலைச் செம்மல்' விருது முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்




சென்னை, பிப்.8

மரபுவழி, நவீன பாணி ஓவிய, சிற்ப கலைகளில் திறமைமிக்க 6 கலைஞர்களுக்கு 'கலைச் செம்மல்' விருதுகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: மரபுவழி மற்றும் நவீன பாணியில் திறமைமிக்க ஓவிய, சிற்பக் கலைஞர்கள் 6 பேருக்கு தமிழக கலை, பண்பாட்டு துறை சார்பில் ஆண்டுதோறும் 'கலைச்செம்மல்' விருது வழங்கப்படுகிறது. இந்த விருதுடன், செப்பு பட்டயம், ரூ.1 லட்சம் விருது தொகை, பாராட்டு சான்றிதழ் ஆகியவையும் வழங்கப்படுகின்றன.

அந்த வகையில், 2024-25ம் ஆண்டுக்கான 'கலைச் செம்மல்' விருதுக்கு மரபுவழி ஓவிய பிரிவில் ஆ.மணிவேலு, சிற்ப பிரிவில் வே.பாலச்சந்தர், கோ.கன்னியப்பன், நவீன பாணி ஓவிய பிரிவில் கி.முரளிதரன், அ.செல்வராஜ், சிற்ப பிரிவில் நா.ராகவன் ஆகிய 6 கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு 'கலைச் செம்மல்' விருதுகளையும், விருதுக்கான செப்பு பட்டயம், ரூ.1 லட்சத்துக்கான காசோலை, பாராட்டு சான்றிதழ்களையும் முதல்வர் ஸ்டாலின் நேற்று வழங்கினார்.

தமிழ் வளர்ச்சி, செய்தி துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாட்டு துறை செயலர் க.மணிவாசன், கலை, பண்பாட்டு துறை இயக்குநர் கவிதா ராமு ஆகியோர் உடன் இருந்தனர்.

## 'வரிவிதிப்பு அரசர்' பரஸ்பர வரி கோப்பில் கையெழுத்திட்ட ட்ரம்ப் இந்தியா மீது மீண்டும் விமர்சனம்

வாஷிங்டன், பிப்.8

இந்தியா மிகவும் அதிக வரி விதிக்கும் நாடு என்றும், அமெரிக்க பொருட்களுக்கு வரி விதிக்கும் நாடுகளின் பொருட்களுக்கு ஏப்ரல் 2ம் தேதி முதல் பரஸ்பர வரிகள் விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.



இந்தியாவின் வர்த்தக வரிகள் குறித்து ட்ரம்ப் குறிப்பிடுவது இது இரண்டாவது முறையாகும். முன்னதாக அவர் இந்தியாவை 'வரிவிதிப்புகளின் அரசன்' என்று விமர்சித்திருந்தார்.

இந்த வாரத்தின் தொடக்கத்தில் அமெரிக்காவின் நாடாளுமன்றத்தில் தனது முதல் உரையை ஆற்றிய ட்ரம்ப் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுடனான வரி ஏற்றத்தாழ்வுகளை குறிப்பிட்டார். அவர் கூறுகையில், "அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு இந்தியா 100 சதவீத வரி விதிக்கிறது. இதேபோல் மற்ற நாடுகளும் அதிக வரி விதிக்கின்றன. இது நியாயமற்றது. ஆட்டோமொபைல் பொருட்களுக்கு 100 சதவீதத்துக்கும் அதிகமாகவே இந்தியா வரி விதிக்கிறது. ஐரோப்பிய யூனியன், இந்தியா, சீனா, பிரேசில், மெக்சிகோ, கனடா போன்ற நாடுகள், நாம் விதிக்கும் வரியை விட அதிக வரிகளை விதிக்கின்றன. அதை பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? எனவே, மற்ற நாடுகள் எவ்வளவு வரி விதிக்கின்றனவோ, அதே அளவுக்கு அமெரிக்காவும் வரி விதிக்கும்.

அமெரிக்க பொருட்களுக்கு மற்ற நாடுகள் அதிக வரி விதிப்பது பல ஆண்டுகளாக உள்ளது. இப்போது நாம் நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. வர்த்தக கொள்கைகளில் அமெரிக்காவுக்கும் மற்ற நாடுகளுக்கும் சமமற்ற நிலை உள்ளது. அதை சரி செய்வதற்குதான் பரஸ்பரம் வரி விதிக்கும் முறையை ஏப்.2ம் தேதி முதல் அமல்படுத்த நினைக்கிறேன்." என்று கூறியிருந்தார்.

ட்ரம்ப் பிரதமர் மோடி சந்திப்பு: இதனிடையே அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பும், இந்திய பிரதமர் மோடியும் கடந்த மாதம் வெள்ளை மாளிகையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது இந்தியாவுடனான அமெரிக்காவின் வர்த்தக பற்றாக்குறை 100 பில்லியன் டாலராக உள்ளது. நீண்ட கால வர்த்தக ஏற்றத்தாழ்வுகளை சரி செய்வதற்கு பேச்சுவார்த்தையைத் தொடங்க இரண்டு தலைவர்களும் ஒப்புக்கொண்டதாக ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

## அதிமுக முன்னாள் எம்எல்ஏ விஜயகுமார் நீக்கம் இபிஎஸ் நடவடிக்கைக்கு காரணம் என்ன?

சென்னை, பிப்.8

அதிமுகவில் இருந்து முன்னாள் எம்எல்ஏ விஜயகுமார் நீக்கப்பட்டுள்ளார். இதை அந்த கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.



தற்போது நீக்கப்பட்டுள்ள விஜயகுமார், திருவள்ளூர் மாவட்ட புரட்சித் தலைவி பேரவைச் செயலாளர் மற்றும் எல்லாபுரம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளராக செயல்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது நீக்கம் குறித்து எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "கட்சியின் கொள்கை, குறிக்கோள்களுக்கும் கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதாலும்; கட்சியின் சட்ட திட்டங்களுக்கு மாறுபட்டு, கட்சியின் ஒழுங்குமுறை குலையும் வகையில் நடந்து கொண்டதாலும்; கட்சியின் கண்ணியத்திற்கு மாசு ஏற்படும் வகையில், கழகக் கட்டுப்பாட்டை மீறி களங்கமும் அவப்பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்ட காரணத்தினாலும், திருவள்ளூர் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் எம்எல்ஏ விஜயகுமார், இன்று முதல் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார். கட்சியினர் யாரும் இவருடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

காரணம் என்ன? முன்னாள் எம்எல்ஏ அதிரடியாக நீக்கப்படுவதற்கு அவர் பாஜக சார்பில் நடைபெற்ற மும்மொழி கொள்கை ஆதரவு கையெழுத்து இயக்கத்தில் கையொப்பம் இட்டதே காரணம் எனக் கூறப்படுகிறது.

மும்மொழி கொள்கைக்கு ஆதரவாக பொதுமக்களிடம் கையெழுத்து இயக்கத்தை பாஜக நேற்று முன்னெடுத்தது. இதனையொட்டி, திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அருகே மஞ்சங்கரணை பகுதியில் நேற்று மும்மொழி கொள்கை ஆதரவு கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது அப்போது, அவ்வழியாக காரில் சென்ற முன்னாள் எம்எல்ஏ விஜயகுமார் மும்மொழி கொள்கைக்கு ஆதரவாக கையெழுத்திட்டார். இந்த சம்பவம் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், அதிமுகவில் இருந்து முன்னாள் எம்எல்ஏ விஜயகுமார் நீக்கப்படுவதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஊடகப் பேட்டியில் முன்னாள் எம்எல்ஏ, தன்னை வற்புறுத்தி கையெழுத்துப் பெற்றதாகக் கூறியுள்ளார்.

## மகா கும்பமேளாவில் உ.பி படகோட்டி ரூ.30 கோடி ஈட்டியது எப்படி? விசாரிக்க அகிலேஷ் வலியுறுத்தல்

புதுடெல்லி, பிப்.8

பிரயாக்ராஜின் மகா கும்பமேளாவில் ஒரு படகோட்டி குடும்பம் ரூ.30 கோடி ஈட்டியதாக முதல்வர் யோகி ஆதித்யநாத் பாராட்டி இருந்தார். இந்த படகோட்டியின் லாபம் மீது விசாரணைக்கு வலியுறுத்தி உள்ளார் சமாஜ்வாதி கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவ்.




ஜனவரி 13ல் துவங்கி 45 நாட்கள் நடைபெற்ற மகா கும்பமேளா பற்றி முதல்வர் யோகி தொடர்ந்து பெருமிதப்பட்டு வருகிறார். அந்தவகையில் அவர் இரண்டு தினங்களுக்கு முன் மகா கும்பமேளாவில் ஒரு படகோட்டி குடும்பம் 130 படகுகள் மூலம் ரூ.30 கோடி ஈட்டியதாகவும் தெரிவித்திருந்தார்.

பிண்ட்டு மெஹ்ரா எனும் அந்த படகோட்டி குடும்பம், பிரயாக்ராஜின் குற்றப் பின்னணி கொண்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது. இதை அறிந்தோ, அறியாமலோ அவரை உ.பி முதல்வர் பாராட்டியது அந்த மாநிலத்தில் சர்ச்சையாகி விட்டது.

இந்நிலையில், உ.பியின் முக்கிய எதிர்க்கட்சியான சமாஜ்வாதி கட்சியின் தலைவர் இப்பிரச்சனையில் உ.பி அரசு விசாரணை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி உள்ளார். படகோட்டி பிண்ட்டு மெஹ்ரா ரூ.30 கோடி லாபம் ஈட்டியது எப்படி என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து உ.பியின் முன்னாள் முதல்வரான அகிலேஷ் யாதவின் சமூகவலைதள பதிவில் குறிப்பிட்டிருப்பதாவது: "மகா கும்பமேளாவில் ரூ.30 கோடி லாபம் சம்பாதித்த படகோட்டியின் குடும்பம் குற்றப் பின்னணி கொண்டது. இவரை முதல்வர் யோகி சட்டப்பேரவையில் பாராட்டியுள்ளார்.

இந்த சம்பவத்தின் உண்மைப் பின்னணி கண்டறியப்பட வேண்டும். இந்த படகோட்டி உண்மையிலேயே ரூ.30 கோடி ஈட்டினார் எனில் அதற்காக அவர் செலுத்திய ஜிஎஸ்டி தொகை எவ்வளவு?

இந்த குற்றவாளி படகோட்டியுடன் ஒப்பந்தம் இட்டுக்கொண்டு அவரை முதல்வர் பாராட்டியுள்ளார். இதுபோன்ற நடவடிக்கைகளால் உ.பி பாஜக ஆட்சியில் கிரிமினல்களுக்கு தைரியம் வளர்ந்து பெருகியுள்ளனர்." எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2019 கும்பமேளா முதல் படகுகளை வைத்துள்ள அரேலி பகுதியின் பிண்ட்டு மெஹ்ரா குடும்பம் தொழில் செய்யத் தொடங்கி உள்ளது. இவர்களிடம் இருந்த 60 படகுகளுடன் மகா கும்பமேளாவுக்காக மேலும் 70 படகுகளை வாங்கி இயக்கியதில் ரூ.30 கோடி சம்பாதித்ததாகத் தெரிவித்துள்ளனர்.

## தமிழக மீனவர்கள் 14 பேர் கைது இலங்கை கடற்படையினர் மீண்டும் அட்டூழியம்

ராமேசுவரம், பிப்.8

மன்னார் வளைகுடா கடற்பகுதியில் தமிழக மீனவர்கள் 14 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.



இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களையும், கைப்பற்றப்பட்ட படகுகளையும் விடுவிக்க வலியுறுத்தி, ராமேசுவரம் தீவு மீனவர்கள் கடந்த பிப்ரவரி 24ல் இருந்து காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், பிப் 28ல் இருந்து தொடர்ந்து ஐந்து நாட்கள் தங்கச்சிமடத்தில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மீனவ பிரதிநிதிகளை டெல்லியில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து மீனவப் பிரச்சினை குறித்து வலியுறுத்தவும், இலங்கைக்கு தமிழக மீனவ பிரதிநிதிகளை அழைத்துச் சென்று அங்குள்ள மீனவ பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும், என தமிழக அரசு சார்பில் அளித்த வாக்குறுதிகளை ஏற்று தொடர் போராட்டத்தை வாபஸ் பெற்றனர்.

இந்நிலையில் வியாழக் கிழமை பாம்பன் தெற்கு கடற்பகுதியிலிருந்து 100க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் சுமார் 500 மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். மன்னார் வளைகுடா தெற்கு கடற்பகுதியில் வியாழக்கிழமை இரவு மீன்பிடித்துக் கொண்டிருந்த ஆரோக்கியம் என்பவரது விசைப்படகை இலங்கை கடற்படையினர் ரோந்துப் பணியின் போது சிறைப்பிடித்தனர்.

படகுகளிலிருந்த ஆரோக்கியம், செல்வம், ஜெயாஸ்டன், ஜோஸ்வா, சீமோன், முத்துராமன், முகிலன், ஆரோக்கியம், வால்டன், மாரிசெல்வம், ஜெயசூர்யா, ரிபாக்சன், தர்மன், .விக்னேஸ்வரன் ஆகிய 14 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். விசைப்படகையும், 14 மீனவர்களையும் தலைமன்னார் அருகே தாழ்வுபாடு கடற்படைமுகாமிற்கு கொண்டு சென்ற இலங்கை கடற்படையினர் மன்னார் மாவட்ட மீன்வளத்துறையினரிடம் ஒப்படைத்தனர். மீனவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு இன்று (வெள்ளிக்கிழமை) மாலை வவுனியா சிறையில் அடைக்கப்பட உள்ளனர்.

## சட்ட உரிமைகளை மகளிர் முழுமையாக பெறும் சூழலை உருவாக்க வேண்டும்: காங்கிரஸ் தமிழ் மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை கோரிக்கை

சென்னை, பிப்.8

மகளிருக்கு சமஉரிமை, சமவாய்ப்பு வழங்குவதோடு, சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை முழுமையாக பெறுகிற வகையில் நல்ல சூழலை உருவாக்க வேண்டுமென்பதே சர்வதேச மகளிர் தினத்தின் நோக்கமாக இருக்க வேண்டும் என்று தமிழக காங்ரகிஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து செல்வப் பெருந்தகை கூறுகையில், "சுதந்திர இந்தியாவில் மகளிர் தங்களுக்கான உரிமைகளை வலியுறுத்திப் போராடி வெற்றி கண்ட நாளை உலக மகளிர் தினமாக கொண்டாடி வருகின்றனர். அவர்களது உரிமைகளை பாதுகாப்பதில் காங்கிரஸ் பேரியக்கம் எப்போதுமே முன்னோடியாக இருந்து வருகிறது. இந்தியாவின் பிரதமராக இந்திரா காந்தி, குடியரசுத் தலைவராக பிரதீபா பாட்டில், மக்களவை சபாநாயகராக மீராகுமார் ஆகியோரை பதவியில் அமர்த்திய பெருமை காங்கிரஸ் பேரியக்கத்தையே சாரும். மகளிர் உரிமைகளை பாதுகாக்க வேண்டுமென்பதில் காங்கிரஸ் கட்சி எப்போதுமே முனைப்பாக இருந்து செயல்பட்டு வருகிறது.

உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவீத இடஒதுக்கீட்டை உறுதி செய்து, அது தற்போது 50 சதவீதமாக உயர்வதற்குக் காரணமாக இருந்து மறைந்த, பிரதமர் ராஜீவ்காந்தியின் கனவை நனவாக்கும் வகையில் நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் 33 சதவிகித இடஒதுக்கீட்டை நிறைவேற்றுவதற்காக மாநிலங்களவையில் மசோதா கொண்டு வந்து நிறைவேற்றியவர் அன்னை சோனியா காந்தி.

ஆனால், 2021 இல் நடத்த வேண்டிய மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தாமல் காலம் தாழ்த்துகிற மத்திய பா.ஜ.க. அரசு, மகளிர் மசோதாவையும் நிறைவேற்றி செயல்படுத்தாமல் கண் துடைப்பு நாடகத்தை நடத்தி வருகிறது. மகளிர் தங்களது உரிமைகளை பெறுவதோடு, பொருளாதார ரீதியாகவும் உயர்வு அடைந்து அவர்களது லட்சியங்கள் நிறைவேறுவதன் மூலமே ஏற்றம் பெறும்.

மத்திய பா.ஜ.க. ஆட்சி அமைந்த பிறகு, பெண்களுக்கு எதிரான வன்முறைக் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் உருவாகி வருகிறது. மகளிருக்கு சமஉரிமை, சமவாய்ப்பு வழங்குவதோடு, சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை முழுமையாக பெறுகிற வகையில் நல்ல சூழலை உருவாக்க வேண்டுமென்பதே சர்வதேச மகளிர் தினத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். அதற்கான முயற்சிகளில் அனைவரும் ஈடுபட வேண்டும்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பாக அனைத்து மகளிர் சமுதாயத்தினருக்கும் உலக மகளிர் தின வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

## ஹோலி பண்டிகை: சென்னை சந்த்ரகாச்சி சிறப்பு ரயில் உட்பட 3 ரயில்கள் அறிவிப்பு

சென்னை, பிப்.8

ஹோலி பண்டிகை முன்னிட்டு சொந்த நகரங்களுக்கு சென்று திரும்பும் பயணிகள் வசதிக்காக சென்னை சென்ட்ரல் சந்த்ரகாச்சி சிறப்பு ரயில் உள்பட 3 சிறப்பு ரயில்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விவரம்: சென்னை சென்ட்ரலில் இருந்து மார்ச் 8, 12 (சனிக்கிழமை, புதன்) ஆகிய தேதிகளில் இரவு 11.45 மணிக்கு (வாரம் இருமுறை சிறப்பு ரயில்06077) புறப்பட்டு, 3வது நாள் (முறையே திங்கள், வெள்ளிக்கிழமை) காலை 7.15 மணிக்கு மேற்குவங்கம் மாநிலம் சந்த்ரகாச்சிக்கு சென்றடையும்.

மறுமார்க்கமாக, சந்த்ரகாச்சியில் இருந்து மார்ச் 10, 14 ஆகிய தேதிகளில் (திங்கள், வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு சிறப்பு ரயில் (06078) புறப்பட்டு, மறுநாள் பிற்பகல் 3.30 மணிக்கு சென்னை சென்ட்ரலை வந்தடையும்.

போத்தனூரில் இருந்து மார்ச் 8, 15 ஆகிய தேதிகளில் (சனிக்கிழமை) முற்பகல் 11.45 மணிக்கு வாராந்திர சிறப்பு ரயில் (06055) புறப்பட்டு, திங்கள்கிழமை (3வது நாள்) பிற்பகல் 2.30 மணிக்கு பீகார் மாநிலம் பாரௌனியை அடையும். மறுமார்க்கமாக, பாரௌனியில் இருந்து மார்ச் 11, 18 ஆகிய தேதிகளில் (செவ்வாய்க்கிழமை) இரவு 11.45 மணிக்கு வாராந்திர சிறப்பு ரயில் (06056) புறப்பட்டு, வெள்ளிக்கிழமை (4வது நாள்) அதிகாலை 3.45 மணிக்கு போத்தனூரை அடையும்.

இதுதவிர, திருவனந்தபுரம் வடக்கு ஹசரத் நிஜாமுதின் சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளது. இந்த ரயில்களுக்கான டிக்கெட் முன்பதிவு தொடங்கு உள்ளது. இந்தத் தகவல் தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வறுமையிலும் நேர்மை! மானாமதுரை தெ.புதுக்கோட்டை பள்ளி மாணவிக்கு பாராட்டு

மானாமதுரை மார்ச்.8

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டாரம் தெ.புதுக்கோட்டை அரசு நிதியுதவி பெறும் எம்.கே.என். நடுநிலைப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் மூவிகா ஸ்ரீ த/பெ முத்துக்குமார் என்ற மாணவி இன்று காலையில் காலை உணவு திட்டம் மூலம் காலை உணவு சாப்பிட பள்ளிக்கு வருகை தரும் போது பிரதான சாலையில் ரூபாய் ஆயிரம் கீழே கிடந்துள்ளதை கண்டெடுத்து உள்ளார்.சுற்று முற்றும் பார்த்த மாணவி அருகில் யாரும் இல்லாத நிலையில் அந்த ரூபாயை பள்ளியில் கொண்டு வந்து காலை உணவு மேற்பார்வை செய்ய வந்த சகாய மைக்கேல் சாந்தி ஆசிரியரிடம் விபரத்தை கூறி பணத்தை ஒப்படைத்தார். பள்ளி ஆசிரியர் மேற்கண்ட விபரத்தை பள்ளி தலைமை





ஆசிரியர் சிவகுருநாதனிடம் கூறி மேற்படி ரூபாயை ஒப்படைத்தார். பள்ளி தலைமை ஆசிரியர் சிவகுருநாதன் காலை வழிபாட்டு கூட்டத்தில் மாணவி மூவிகா ஸ்ரீ யின் நேர்மையை பாராட்டி பொன்னாடை அணிவித்து இது போன்ற நேர்மையான செயல்பாடுகள் தான் மாணவர்கள் உயர்வுக்கு வழி காட்டும் என்று பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாராட்டி வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.மேற்படி பணத்திற்கு உரியவர் உரிய ஆதாரங்களுடன் கூறினால் உரியவரிடம் ஒப்படைக்கப்படும் என்று கூறிய தலைமை ஆசிரியர் கிராமத்தில் இது குறித்து கூறும்படி மாணவர்களிடம் கூறினார்.



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷாஅஜித் தலைமையில் மகளிர் தின விழா நடைபெற்றது . அப்போது அவர் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார் .




தேனி மாவட்டம், தனியார் மண்டபத்தில் நடைபெற்ற தேனி நகர் மன்ற சார்பாக தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு க ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு தேனி அல்லிநகரம் நகராட்சி பணியாளர்கள், தூய்மை பணியாளர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் தலைமையில் மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார், நகர மன்ற தலைவர் ரேணுகா பிரியா பாலமுருகன் முன்னிலையில் 500க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் துரை சார்ந்த அதிகாரிகளும்,நகராட்சி அலுவலர்களும் கலந்து கொண்டனர்

# வாடிப்பட்டி அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு 3 வேளை உணவு வழங்கல்

வாடிப்பட்டி, மார்ச்.8

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அரசு மருத்துவமனை தாலுகா தலைமை யிட நிலையில் உள்ளது. இதனால் இந்த மருத்துவமனைக்கு உள் மற்றும் புற நோயாளிகள் அதிக அளவில் வந்து குணமடைந்து செல்கின்றனர். அதில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் உள்நோயாளிகளுக் கு பல ஆண்டுகளாக பால், ரொட்டி, வாழைப்பழம் வழங்கப்பட்டு வந்த து. அதற்கு பதிலாக உணவு வழங்க வேண்டும் என்று தலைமை மருத்து வர் சாந்தி



கோரிக்கை விடுத்து வந்தார். இந்நிலையில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் உத்தரவின்படி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா சுப்பிரமணி பரிந்து ரையின்படி மாவட்ட ஆட்சித் தலை வர் சங்கீதா, மாவட்ட இணை இயக் குனர் டாக்டர் செல்வராஜின் வழிகாட்டுதலின்படி காலை, மதியம்,இரவு 3 வேளைகளிலும் உணவு வழங்க நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சிக்கு தலைமை மருத்துவ அலுவலர் சாந்தி தலைமை தாங்கி நோயாளிகளு க்கு காலை உணவு வழங்கினார். இதில் டாக்டர்கள் வேல்முருகன் முத்து லட்சுமி செவிலியர் கண்காணிப் பாளர் தமிழ்செல்வி, செவிலி யர்கள் ஜெயராம் பாப்பம்மாள், லட்சுமி, பேபி ராணி மற்றும் சமையல் உதவியாளர் ருக்மணி ஆகியோர் இருந்தனர். இந்த உணவினை பெற்றுக் கொண்ட நோயாளிகள் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்தனர்.

# தமிழ்நாடு பென்சிங் ஸ்டேட் சாம்பியன்ஷிப் வாள்வீச்சு போட்டி

தாம்பரம் மார்ச் 8

தமிழ்நாடு பென்சிங் ஸ்டேட் சாம்பியன்ஷிப் 2024-2025க்கான வாள்வீச்சு போட்டி தாம்பரத்தில் நடைபெற்றது

செங்கல்பட்டு மாவட்ட பென்சிங் சாம்பியன் அச்சோசியேஷன் ஏற்பாட்டில் நடந்த தமிழ்நாடு பென்சிங் ஸ்டேட் சாம்பியன்ஷிப் 2024 2025க்கான வாள்வீச்சு போட்டி செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் உள்ள பாத்திமா அன்னை சோஷியல் வெல்ஃபேர் ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக சி.டி.எஃப்.சி.ஏ தலைவர் லயன் டில்லிபாபு தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஒலிம்பிக் அசோசியேஷன் சி.இ.ஓ பெர்னான்டோ, வெர்டிவ் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் சி.இ.ஓ ரங்கராஜன் நரசிம்மன், சென்னை, ஸ்ரீ கிருஷ்ணா இன்ஜினியரிங் காலேஜ் பவுண்டர் மற்றும் சேர்மன் டாக்டர் விவேகானந்தன்




மற்றும் சி.டி.எஃப்.சி.ஏ செயலாளர் சிவராமன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த வாள்வீச்சு போட்டியில் சிறப்பாக விளையாடி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள். இந்நிகச்சியில் நடுவர்கள் உட்பட ஏராளனமான பென்சிங் வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்..

# சோழவந்தான் அருகே தென்கரையில் திமுக விவசாய அணி சார்பாக 2 லட்சம் மரக்கன்றுகள் நடும் பணியை தொடங்கி வைத்த அமைச்சர்

சோழவந்தான் மார்ச் 8

தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் 72 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்டம் விவசாய அணி சார்பாக சோழவந்தான் அருகே தென்கரையில் 7.2 லட்சம் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியில் பங்கேற்ற பத்திரப்பதிவு மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் மூர்த்தி தலைமை தாங்கி மரக்கன்றுகளை நட்டு தொடங்கி வைத்தார்

மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வக்கீல் முருகன் தென்கரை ஊராட்சி செயலாளர் சோழராஜன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார் சோழவந்தான் வெங்கடேசன் எம் எல் ஏ முன்னில வகித்தார் நிகழ்ச்சியில் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் முன்னாள் திருமங்கலம் எம் எல் ஏ முத்துராமலிங்கம் விவசாய அணி துணைச் செயலாளர் கணேசன் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி பி ராஜா மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் நேரு பாண்டியன் வாடிப்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் லட்சுமி காந்தன் கிருஷ்ணவேணி வாடிப்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளர்



பசும்பொன்மாறன் வடக்கு ஒன்றிய செயலாளர் பால ராஜேந்திரன் மேற்கு ஒன்றிய செயலாளர் சிறைச்செல்வன் சோழவந்தான் பேரூராட்சி தலைவர்கள் எஸ் எஸ் கே ஜெயராமன் பால்பாண்டியன் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ் துணைத் தலைவர்கள் லதா கண்ணன் வாடிப்பட்டி வக்கீல் கார்த்திக் சோழவந்தான் பேரூர் செயலாளர் வழக்கறிஞர் சத்திய பிரகாஷ் அலங்காநல்லூர் ரகுபதி ஆனையூர் பகுதி செயலாளர் மருதுபாண்டி பொதுக்குழு உறுப்பினர் ஸ்ரீதர் சி பி ஆர் சரவணன் மாவட்ட பிரதிநிதி பேட்டை பெரியசாமி இளைஞரணி வெற்றிச்செல்வன் அன்புச்செல்வன் ஐயப்பன் மணிவேல் மாணவரணி எஸ் ஆர் சரவணன் மகளிர் அணி சந்தான லட்சுமி முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் ரேகா வீரபாண்டி சுப்பிரமணி தொமுச நிர்வாகிகள் அமிர்தராஜ் பாலசுப்பிரமணியன் பாலமுருகன் ஹபீப் முகமது மேலக்கால் ராஜா சங்கங்கோட்டை சந்திரன் ரவி சமரன் வார்டு பிரதிநிதி ராமநாதன் ஊத்துக்குளி ராமலிங்கம் விக்னேஷ் தென்கரைக் கண்மாய் பாசன விவசாய சங்க பிரதிநிதிகள் மாவட்ட பிரதிநிதி ராஜாராமன் முள்ளிப்பள்ளம் ஊராட்சி முன்னாள் துணைத் தலைவர் கேபிள் ராஜா நன்றி கூறினர்.

# மானாமதுரை அருகே பெரும்பச்சேரி கிராமத்தில் தொடக்கப்பள்ளியில் 50வது ஆண்டுவிழா



மானாமதுரை, மார்ச்.8

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள பெரும்பச்சேரி கிராமத் தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 50வது ஆண்டுவிழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பள்ளி மேலாண்மை குழு தலைவர் கார்த்திகை செல்வி தலைமை வகித்தார். மேற்பார்வையாளர் ராமையா முன்னிலை வகித்தார். ஆசிரியர்கள் லதா மாலினி வாழ்த்துரை வழங்கினர். மாணவர்களின் கண் கவரும் நிகழ்ச்சிகளான நடன போட்டி கோலம் போட்டி நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

தலைமையாசிரியர் மனோகரன் அனைவரையும் வரவேற்று ஆண்டு அறிக்கை வாசித்தார். இந்த நிகழ்ச்சி கிராம பொதுமக்கள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். உதவி ஆசிரியர் அஞ்சுகம் இறுதியில் நன்றியுரை கூறினார்.

மாணவர்களுக்கு தொண்டு நிறுவனம் திவ்யா நடனம் கற்றுத் தந்தார். நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை தலைமை ஆசிரியர் மனோகரன் தலைமையில் ஆசிரியர்கள் செய்திருந்தனர்..

# போக்குவரத்து தொழிலாளர்கள் கோரிக்கைகளை பட்ஜெட் கூட்டத்தில் பேசி முடிவு காண தொழிற்சங்கத்தினர் வலியுறுத்தல்

சென்னை, பிப்.8

போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கையை வரும் பட்ஜெட் கூட்டத் தொடரின்போது பேசி முடிக்க வேண்டும் என தொழிற்சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர். போக்குவரத்துக் கழகங்களின் வரவுக்கும் செலவுக்குமான வித்தியாசத் தொகையை பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

15வது ஊதிய ஒப்பந்தத்தை உடனே பேசி முடிக்க வேண்டும், ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு பணப்பலன் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சிஐடியு, ஏஐடியுசி, டிடிஎஸ்எப் மற்றும் ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் சார்பில் சென்னை பல்லவன் சாலையில் நேற்று கோட்டை நோக்கி பேரணி நடைபெற்றது.

அங்கு, பாடிகாட் முனீஸ்வரர் கோயில் அருகிலிருந்து பேரணியை சங்கங்களின் தலைமை நிர்வாகிகள்,




கே.ஆறுமுகநயினார், சசிக்குமார், வி.தயானந்தம், கனகராஜ், நந்தாசிங், முருகராஜ், திருமலைச்சாமி, ராஜாஜி ஆகியோர் ஒருங்கிணைத்தனர். சிஐடியு மாநிலத் தலைவர் அ.சவுந்தரராஜன் பேரணியை தொடங்கி வைக்க, அவரது தலைமையில் தொழிலாளர்கள் அணிவகுத்து அரசுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கும் வகையில் கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

தொடர்ந்து, பேரணியை பல்லவன் இல்லம் முன்பு காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர். பின்னர், காவல்துறை அறிவித்தபடி தொழிற்சங்கத்தினர் சென்னை, தலைமைச் செயலகத்தில் போக்குவரத்து செயலரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

முன்னதாக செய்தியாளர்களிடம் சவுந்தரராஜன் கூறியதாவது: வரவுக்கும் செலவுக்குமான வித்தியாச தொகையை வழங்காமல் போக்குவரத்து தொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. தனியார்மய நடவடிக்கையை கைவிட வேண்டும். மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற பொறுப்புணர்ச்சியின் காரணமாக கடுமையான போராட்டங்களுக்கு செல்லாமல் உள்ளோம். இதை பலவீனமாக கருதினால், அதற்கான பதிலை தருவோம்.

மத்திய அரசு பணம் தரவில்லை என்று மாநில அரசு கேட்பது நியாயமானது. தமிழகமே அரசின் பின்னால் நிற்கிறது. அதேபோன்று மாநில அரசு போக்குவரத்து தொழிலாளர்களுக்கு, அவர்களது பணத்தை ஆண்டுக் கணக்கில் கொடுக்காமல் உள்ளோம் என்பதை ஏன் உணர மறுக்கிறார்கள்? போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கையை நடப்பு பட்ஜெட் கூட்டத் தொடரின்போது பேசி முடிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# திருப்புவனம் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட முயன்ற இருவர் கைது-காவலர்களுக்கு பாராட்டு

திருப்புவனம் மார்ச் 8

சிவகங்கை மாவட்டம் மானா மதுரை காவல் உட்கோட்டத் திற்கு உட்பட்ட பூவந்தி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சந்தான கருப்பு ரோந்து பணி மேற்கொண்டார் பொது சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் இரண்டு இளைஞர்கள் சுற்றித்திரிந்தனார் அவர்களைப் பிடித்து விசாரணை செய்ததில் முன்னுக்குப்பின் முரணாக பதிலளித்தனர் அவர்கள் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியது.

அவர்களைப் பிடித்து சோதனை செய்ததில் தமிழக





அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா விற்பனைக்காக வைத்திருந்தது தெரியவந்தது. சம்பவத்தில் ஈடுபட்ட திருப்புவனம் புதூர் பஞ்சமடம் தெருவை சேர்ந்த சாந்த பிரியன் (22) மற்றும் ராமநாதபுரம் மாவட்டம் தொண்டியைச் சேர்ந்த வினோத் பாண்டி (27) இருவரிடம் இருந்து 115கிராம் கஞ்சா மற்றும் TN37DP 7529 யமஹா ஆர்15 ரொக்கம் 37,000/ ஆகியவற்றை காவல்துறையினர் பறிமுதல் செய்து நீதிபதி முன்பு ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைத்தனர். சிறப்பாக செயல்பட்ட காவலர்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் மற்றும் மானாமதுரை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் நிரேஷ் பாராட்டினார்கள்.



தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் வட்டம் இளம்புவனம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி மையம் கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



சேலம் மாவட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பாலமலை கிராம ஊராட்சியில் புதிய தார்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம் மற்றும் முன்னாள் படைவீரர் சிறப்பு குறைதீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா இ.ஆ.ப., அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



மதுரை மாவட்டம் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், கரிசல்களாம்பட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பான சிறு புகைப்பட கண்காட்சி ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்து மகிழ்ந்தனர்




திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவிகளுக்கு குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவு மற்றும் சைபர் க்ரைம் போலீசார் பெண்கள் பாதுகாப்பு மற்றும் சட்ட ரீதியான திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஏ.டி.எஸ்.பி தெய்வம் தலைமை நடைபெற்றது.இதில் குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் அமுதா,சைபர் கிரைம் போலீஸ் இன்ஸ்பெக்டர் விக்டோரியா லூர்து மேரி,சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் மகாலட்சுமி மற்றும் பேராசிரியர்கள், மாணவ மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மதுரை மாநகராட்சி CITIIS 2.0 கீழ் ரூ.314.69 கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது



மதுரை, மார்ச்.8

இந்திய அரசாங்கம்City Investment to Innovate Integrate and Sustain 2.0 (CITIIS 2.0) திட்டத்தை 31 மே 2023 அன்று அங்கீகரித்துள்ளது. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வசதி அமைச்சகம்(MOHUA) French Development Agency (AFD), Kreditanstalt für Wiederaufbau(KfW), European Union(EU), National Institute of Urban Affairs (NIUA) ஆகிய நிறுவனங்கள் ஒருங்கிணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சிமிஜிமிமிஷி 2.0 திட்டத்திற்காக மதுரை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் Waste to Energy (WtE) பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

இதற்கான நாற்கர ஒப்பந்தம் (மாநகராட்சி, ஸ்மார்ட் சிட்டி லிமிடெட், மாநில அரசு மற்றும் மத்திய அரசு) ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் 12வது பிராந்திய 3ஆர் மற்றும் சுற்றறிக்கை பொருளாதார மன்றத்தில் CITIIS 2.0 திட்;டத்தின் கீழ் ரூ.314.69 கோடி மதிப்பீட்டில் 03.03.2025 அன்று மேயர்இந்திராணி பொன்வசந்த், ஆணையாளர்சித்ரா விஜயன், அவர்கள் ஆகியோர் பங்கேற்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

# ஒட்டன்சத்திரம் தொகுதியில் நலத்திட்ட பணிகளை துவக்கிவைத்த உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர்





ஒட்டன்சத்திரம், மார்ச்.9

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, காவேரியம்மாபட்டி ஊராட்சியில் ரூ.12.67 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நியாயவிலைக்கடை கட்டடம், புலியூர்நத்தம் ஊராட்சி, சின்னகுளிப்பட்டி தர்கா அருகில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பயணியர் நிழற்குடை, பெரிய குளிப்பட்டியில் ரூ.12.67 இலட்சம மதிப்பீட்டில் கட்டப்பட்ட நியாயவிலைக்கடை கட்டடம், பி.என்.கல்லுப்பட்டியில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயக்கூடம் மற்றும் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பொது நூலக கட்டடம் ஆகியவற்றை உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார். மேலும் பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கினார்.

தொடர்ந்து புலியூர்நத்தம் ஊராட்சி, பெரியகுளிப்பட்டி முதல் வண்ணாம்பாறை வரை ரூ.38.01 இலட்சம் மதிப்பீட்டிலும், பி.என்.கல்லுப்பட்டி முதல் தாடிக்கொம்பு பள்ளபட்டி (வழி மதுரைவீரன் கோயில்) சாலை ரூ.73.69 இலட்சம் மதிப்பீட்டிலும் சாலைமேம்பாட்டுபணிகளுக்கு அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சிகளில் அமைச்சர் தெரிவித்ததாவது:

அனைத்து ஊராட்சிகளும் சீரான வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக குடிநீர் வசதி, சாலை வசதி, தெருவிளக்கு வசதி, சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து அடிப்படை தேவைகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார். இந்நிகழ்ச்சிகளில், ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் ஜோதீஸ்வரன், மத்திய ஒன்றிய செயலாளர் எஸ்.ஆர்.கே.பாலு, ஒட்டன்சத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலர் எம்.காமராஜ் மற்றும் துறை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# ஆத்தூர் தொகுதியில் ரூ.97 லட்சத்தில் முடிவுற்ற பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்



பவானி, மார்ச்.8

ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், சித்தரேவு ஊராட்சி, சிங்காரக்கோட்டையில் 15வது நிதிக்குழு மானியத்தில் 20232024 ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலையம், ஒட்டுப்பட்டியில் நமக்குநாமே திட்டத்தில் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டடம், சங்கரெட்டிகோட்டையில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டடம், அய்யங்கோட்டை ஊராட்சி, ஏ.புதூரில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பொது விநியோகக் கடை கட்டடம் மற்றும் பிரதமந்திரி முன்னோடி கிராமத் திட்டத்தில் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டடம் என மொத்தம் ரூ.97.00 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டுமக்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். எல்லோருக்கும் எல்லாம் என்பதுதான் திராவிட மாடல் ஆட்சி என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் நிருபித்துக் காட்டியுள்ளார். அரசின் திட்டங்கள் அனைத் தும், கடைக்கோடியில் வசிக்கும் மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், சித்தரேவு ஊராட்சி மற்றும் அய்யங்கோட்டை ஊராட்சி ஆகிய பகுதிகளில் ரூ.97.00 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கு தேவையான நியாயவிலைக்கடை, சத்துணவு மையம், நாடக மேடை, திருமண மண்டபம், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு குடிநீர் வழங்குவதற்கு குடிநீர் தொட்டிகள் ஆகிய அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. திண்டுக்கல் மாவட்டத்திலும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்ந்துமேற்கொள்ளப்பட்டு வருகின்றன.அரசின் திட்டங்களை பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண் டும் என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சிகளில், கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் .சி.குருமூர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தட்சணாமூர்த்தி, அருள்கலாவதி, வட்டாட்சியர் முத்துமுருகன், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாலை தந்தி



# சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பணிநியமன ஆணையினை வழங்கிய கன்னியாகுமரி ஆட்சியர்

கன்னியாகுமரி, மார்ச்.8

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம், நான் முதல்வன் மற்றும் மாவட்ட திறன் மேம்பாட்டு நிறுவனம் இணைந்து நடத்திய சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா, கலந்து கொண்டு, தேர்வு செய்யப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு பணி நியமன ஆணையினை வழங்கி பேசுகையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிற்குட்பட்ட நகர்புற மற்றும் கடைகோடி கிராமங்களில் உள்ள படித்த இளைஞர்கள் மற்றும் இளம்பெண்களுக்கு பொது நிறுவனங்கள், தனியார் தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் சார்பில் வேலை வழங்கும் நோக்கில் கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்புத்துறை, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம், நான் முதல்வன் மற்றும் மாவட்ட திறன் மேம்பாட்டு நிறுவனம் வாயிலாக கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி தகுதியானவர்களுக்கு உடனடியாக பணிஆணை வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் நேற்றைய தினம் மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம், நான் முதல்வன் மற்றும் மாவட்ட திறன் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு தனியார் வேலைவாய்ப்பு முகாமில் கங்கைகொண்டான் டாடா பவர், போஷ் நிறுவனம், ஃப்ளோகுளோபல், ஆழ்த்தி சொலுஷன்ஸ், ஆர்ஷெல் பிசினஸ் சொலுஷன்ஸ், பிடிம் டெக்னாலஜிஸ், ஃகிலோவின் டெக்னாலஜிஸ் ஆகிய பத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்து கொண்டனர்.



இந்த முகாமில் 700 பேர் பதிவு செய்து 500 பேர் கலந்துக்கொண்டார்கள். குறிப்பாக டாடா பவர் நிறுவனம் 75 நபர்களையும், பிறிகால் பிறிஷன் நிறுவனம் 57 நபர்களையும், டி.வி.எஸ். நிறுவனம் 75 நபர்களையும், ஆழ்த்தி சொலுஷன்ஸ் நிறுவனம் 2 நபர்களையும், ஆர் ஷெல் பிசினஸ் சொலுஷன்ஸ் நிறுவனம் 20 நபர்களையும், பிடிம் டெக்னாலஜிஸ் 10 நபர்களையும், ஈத்தா மொழி கயிறு நிறுவனம் 1 நபரையும், அஜைல் டிரைப்ஸ் நிறுவனம் 1 நபரையும் தேர்வுச்செய்தனர். பணியாணை பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட திறன் மேம்பாட்டு அலுவலக உதவி இயக்குநர் லட்சுமிகாந்தன், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்க திருநெல்வேலி மண்டல திட்ட மேலாளர் ராகுல், கோயம்புத்தூர் மண்டல திட்ட இணை மேலாளர் ராஜசேகர் பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த மனித வள அலுவலர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர். அழகுமீனா, தலைமையில் பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் வெங்கடேஷ், பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக செயல்பாடுகள் குறித்து துறைசார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்கள்.




தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் முன்னாள் படை வீரர் நல அலுவலகத்தின் சார்பில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர்கள் பயன்பெறும் வகையில் தொடங்கப்பட்டுள்ள “முதல்வரின் காக்கும் கரங்கள்” திட்டத்தின் கீழ் தொழில் தொடங்க விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர் (முன்னாள் படைவீரர்கள், சார்ந்தோர்கள்)களை தேர்வு செய்வது தொடர்பாக மாவட்ட அளவிலான பணிக்குழு தேர்வுக்குழு உறுப்பினர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் படை விரர் நல உதவி இயக்குநர் தெய்வசிகாமணி, அரசு அலுவலர்கள் உட்பட குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட பல்வேறு துறைகளின் சார்பில் ஆட்சியர் தலைமையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

சிவகங்கை, மார்ச்.8

சிவகங்கை மாவட்டத்தில், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, வருவாய்த்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, பள்ளிக் கல்வித்துறை, மகளிர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில், பல்வேறு நிகழ்வுகள் இன்றையதினம் (07.03.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.



இதில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில், சர்வதேச மகளிர் தினம் மற்றும் பெண் குழந்தைகளை காப்போம்! பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்!! திட்டத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு, “பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்” திட்டத்தின் மூலமாக, சிவகங்கை மாவட்டத்தில் பெண் குழந்தையின் பிறப்பு விகிதத்தை அதிகரிக்கும் வகையில், பாலின பாகுபாடு அடிப்படையில், பெண் சிசு கொல்லப்படுவதை தடுத்தல், பெண்குழந்தையின் கல்வி திறனை உயர்த்துதல்;, ஆண் குழந்தைகளுக்கு நிகராக பெண்குழந்தைகளை விளையாட்டுகளில் சிறந்து விளங்க ஊக்குவித்தல் மற்றும் வளரிளம் பருவத்திற்கான ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் பற்றிய கல்வியை உறுதிப்படுத்துதல் போன்றவை பற்றி விழப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் துவக்கி வைத்து,

மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் பணிபுரியும் காவலர் மற்றும் போக்குவரத்து காவலர்களுக்கு நிழற்குடைகளையும் மற்றும் ஆட்சியர் வளாகத்தில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு மேலங்கிகளையும் வழங்கி, மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்து, தொடங்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், சர்வதேச மகளிர் தின விழாவை முன்னிட்டு, வருவாய்த்துறை, பள்ளிக் கல்வித்துறை மற்றும் மகளிர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டு, “பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்” திட்டத்தின் கீழ் மாணவியர்களிடையே நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயங்கள் மற்றும் புத்தகங்களை பரிசாக வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி அவர்கள், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், உதவி ஆணையர் (கலால்) ரெங்கநாதன், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் உமா மகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துக்கழுவன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) செல்வி.கீர்த்தனா மணி, மாவட்ட சமூக நல அலுவலர் ரதிதேவி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் துரை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜெயமணி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் முத்து மாரியப்பன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேனி மாவட்டம் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை பொதுக்கணக்குக் குழுவின் (2024--2025) ஆய்வுக்கூட்டம்

தேனி மாவட்டம் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை பொதுக் கணக்குக் குழுவின் (2024-2025) ஆய்வுக்கூட்டம் குழுத்தலைவர் கு.செல்வபெருந்தகை தலைமையில் குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், முன்னிலையில் நடைபெற்றது.

தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக்கணக்குக் குழுவின் (2024-2025) ஆய்வுக் கூட்டம் குழுத்தலைவர் கு.செல்வபெருந்தகை தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், அவர்கள், தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் சட்டமன்ற பேரவை பொதுக்கணக்குக் குழு உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்கள் அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி (போளூர்), கோ. ஐயப்பன் (கடலூர்), எஸ்.சந்திரன் (திருத்தணி), ஐ.பி.செந்தில்குமார் (பழனி), எஸ்.சேகர் (பரமத்தி வேலூர்) மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். சரவணக்குமார் அவர்கள், ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆ.மகாராஜன் அவர்கள், துணைச் செயலாளர் ஜெ.பாலசீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் இன்று (07.03.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை பொதுக்கணக்குக் குழுத்தலைவர் கு.செல்வபெருந்தகை தெரிவித்ததாவது,

இந்தியாவில் பொதுக் கணக்குக்குழு பிரிட்டிஸ் பாராளுமன்ற முறையை பின்பற்றி 1921 ஑ ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்டது. பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றத்தில் நிதிநிலை தாக்கல் செய்யப்படும்பொழுது, ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியின் அளவு, ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி முறையாக செலவிடப்படுகிறதா என்பதை இந்திய தணிக்கைத்துறை கணக்காய்வு தலைவர் மற்றும் ஒவ்வொரு மாநிலத்திலும் மாநில கணக்காயர்கள் மூலம் கண்காணித்து சமர்ப்பிக்கப்படும் அறிக்கை குறித்து ஆய்வு மேற்கொள்ள இந்திய பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு பொதுக்கணக்குக் குழு அமைக்கப்படுகிறது.



தமிழ்நாட்டில் பொதுக்கணக்குக் குழுவில் நிதி அமைச்சர் உட்பட 19 உறுப்பினர்கள் உள்ளார்கள். மாநில கணக்காயரின் வரவு-செலவு அறிக்கை குறித்து ஆய்வு செய்து, அலுவலர்களிடம் விளக்கம் கேட்டறிந்து, அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள செய்வதுதான் பொதுக்கணக்குக் குழுவின் பணியாகும்.

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத்தின் நிர்வாக வெளிப்படைத்தன்மை மற்றும் முழுமையான ஜனநாயகத்தை உறுதி செய்வது பொதுக்கணக்குக் குழு என்று மேதகு குடியரசுத்தலைவர்கள் தெரிவித்துள்ளார்கள். மக்களின் சார்பில் நிர்வாகத்தின் கணக்கு வழக்குகளை பொதுக்கணக்குக் குழு பராமரித்து உண்மையான வெளிப்படைத்தன்மையை நிலைநாட்டுகிறது.

தூய்மையான பொதுவாழ்க்கையில் கணக்கு வழக்குகளை சிறப்பாக கையாள்வது அவசியம் என்று மகாத்மா காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார்கள். பொதுமக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப பொதுக்கணக்குக் குழு சட்டப்பேரவையில் செயலாற்றுகிறது.

ஒவ்வொரு ரூபாயும் மக்களின் வரிப்பணம். ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் முறையாக செலவிடப்பட்டு மக்களை சென்றடைவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை பொதுக்கணக்குக் குழுத்தலைவர் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பள்ளிக்கல்வித்துறை, உயர் கல்வித்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, வணிகவரி மற்றும் பதிவுத்துறை ஆகிய துறைகளில் இந்தியக் கணக்காய்வு தணிக்கைத்துறை தலைவரின், தணிக்கை பத்திகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



பின்னர், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் தலா ரூ.1,01,800/- மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் 10 நபர்களுக்கும், தாட்கோ சார்பில் தேநீர் நிலையம் அமைப்பதற்கு 1 நபருக்கு ரூ.9,95,706/- கடனுதவியும், 2 தூய்மை பணியாளர்களுக்கு நல வாரிய உறுப்பினர் அட்டைகளையும், கூட்டுறவுத்துறை சார்பில் 4 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.30,40,000/- வேளாண்மை கடனுதவியும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் தலா ரூ.4000/- மதிப்பிலான மின்கல தெளிப்பான் 2 நபர்களுக்கும், ரூ.4000/- மதிப்பிலான வனவிலங்கு விரட்டி 1 நபருக்கும், வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் ரூ.38,100/- மதிப்பிலான களையெடுக்கும் இயந்திரம் 1 நபருக்கும், ரூ.1,20,000/- மதிப்பிலான சிறிய உழவு இயந்திரம் 1 நபருக்கும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் ரூ.87,500/- மதிப்பீட்டில் வெங்காய சேமிப்பு கிடங்க அமைப்பதற்கு கடனுதவியும், ரூ.3800/- மதிப்பிலான விசை தெளிப்பான் 1 நபருக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் தலா ரூ.6690/- மதிப்பிலான தையல் இயந்திரம் 2 நபர்களுக்கும், சமூக நலத்துறையின் சார்பில் தலா ரூ.5538/- மதிப்பிலான தையல் இயந்திரம் 20 நபர்களுக்கும் என மொத்தம் 46 பயனாளிகளுக்கு ரூ. 54,39,246/- மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை பொதுக்கணக்குக் குழுத்தலைவர் வழங்கினார்கள்.

முன்னதாக, வடபுதுப்பட்டி ஊராட்சியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள வீட்டினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தொடர்ந்து, அல்லிநகரம் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மாணவியர் விடுதியினை பார்வையிட்டு, விடுதியின் அடிப்படை வசதிகள் குறித்தும், மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் தினசரி வருகை பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது குறித்தும், பிற பதிவேடுகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும், விடுதி மாணவியர்களின் கோரிக்கையை நிறைவேற்றது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்கள்.

தேனி தீயணைப்பு நிலையத்தில் தீ விபத்து மற்றும் தடுப்பு பணிகளுக்காக பயன்படுத்தப்படும் கருவிகள் குறித்தும், இயற்கை இடற்பாடுகள் மற்றும் பேரிடர் காலங்களில் மீட்பு பணியின் போது கொண்டு செல்லப்படும் உபகரணங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும் தீ அணைப்பு உபகரணங்கள் பயன்படுத்தும் முறை குறித்து அலுவலர்கள் எடுத்துரைத்தனர்.

பின்னர், ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் தேனி-பூதிப்புரம் சாலைப் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு உரிய காலத்திற்குள் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இந்நிகழ்வுகளில் ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம் வன பாதுகாவலர் / துணை இயக்குநர் ஆனந்த் அவர்கள், மாவட்ட வன அலுவலர் சமர்த்தா, மாவட்ட வருவாய் அலுவலர் ஐ.மகாலட்சுமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அபிதா ஹனீப், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சந்திரா, பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடன், உதவி வன பாதுகாவலர் அரவிந்த் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துமாதவன், தேனி-அல்லிநகரம் நகர்மன்றத் தலைவர் ரேணுபிரியா பாலமுருகன், மாவட்ட வழங்கல் அலுவலர் மாரிசெல்வி, முதன்மை கல்வி அலுவலர் இந்திராணி, மாவட்ட சமுக நல அலுவலர் சியாமளாதேவி, தாட்கோ மேலாளர் சரளா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161